**செய்தி வெளியீடு எண்: 241** **நாள்: 31.03.2020**

## செய்தி வெளியீடு

**மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் சீரிய வழிகாட்டுதலின் படி மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை மற்றும் தகவல் தொழில் நுட்பவியல் துறை அமைச்சர் அவர்கள் மாவட்ட ஆட்சியர்களுக்கு முதியோர் உதவித்தொகை வழங்கவது சம்மந்தமாக வேண்டுகோள்.**

தமிழகத்தில் ஒவ்வொரு மாதமும் முதியோர் உதவித்தொகை உள்ளிட்ட உதவித்தொகைகள் அஞ்சலக மணியார்டர் மூலமாகவும் வங்கிக் கணக்கின் மூலமாகவும் வழங்கப்பட்டு வருகிறது. இவ்வாறு ஒவ்வொரு மாதமும் 32,45,000 பயனாளிகளுக்கு, ஒவ்வொரு பயனாளிக்கும் ரூ 1000 வழங்கப்பட்டு வருகிறது. தற்போதைய 144 தடை உத்தரவு அமலில் உள்ள சூழ்நிலையில் முதியோர்களை கொரோனா வைரஸ் தாக்கத்திலிருந்து பாதுகாக்கவும் அவர்கள் நலனை பேணவும் சிறப்பு ஏற்பாடாக பயனிாளிகளுக்கு அவர்களின் இருப்பிடத்திற்கே சென்று நேரடியாக உதவித் தொகையினை தடையின்றி வழங்க தேவையான நடவடிக்கை மேற்கோள்ள வேண்டும். எனவே, அனைத்து மாவட்ட ஆட்சியர்களும் பயனாளிகளுக்கு அவர்கள் வீட்டிற்கே சென்று உதவித்தொகை வழங்க சம்மந்தப்பட்ட சமூகப் பாதுகாப்புத் திட்ட துணை ஆட்சியர், வட்டாட்சியர் மற்றும் வங்கி சேவையாளர்களுக்கும், தபால் துறை ஊழியர்களுக்கும் உரிய அறிவுரை வழங்க மாவட்ட ஆட்சியர்கள் அறிவுறுத்தப் படுகின்றார்கள்

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**